# திக்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

---

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திக்வெல்ல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளிடையே ரூபா 827,928 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக மத்திய அரசிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டண பில் பண்ணியவை ரூபா 443,932 நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(இ) கணக்காய்வு கட்டணத்திற்காக மீளாய்வாண்டிற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், பொதுக் களஞ்சிய பெறுமதி ரூபா 90,533 தொகை எனினும் களஞ்சிய பேரேட்டின் பிரகாரம் பெறுமதி (பொதுப் பண்டங்கள் மற்றும் வீதி விளக்குகள்) ரூபா 88,709 தொகை எனினும் வித்தியாசம் ரூபா 1,824 ஆகும்.

(உ) மீளாய்வாண்டின் போது கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது கிடைத்திருந்த ரூபா 4,082,580 ஒரே முறையில் பெறும் பணம் (Key money) ஆண்டிற்கான வருமானத்திற்கு எடுக்காமல் திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் என காட்டப்பட்டிருந்தது.

(ஊ) (i) மீளாய்வாண்டிற்கான இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் காட்டப்படும் பெறுமதிக்கும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம்

காட்டப்படும் பெறுமதிக்கும் இடையே ரூபா 120,000 தொகையான வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ii) 414 ஆம் இலக்க வங்கி கணக்கு தொடர்பாக 2010 திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30,606,353 ஆகும்.

(ஆ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் உள்ளராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,194,594 இற்கான தவணைப் பணம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

07 கணக்கு விடயங்களைச் சேர்ந்த ரூபா 196,409,511 தொகை பெறுமதியான மீதிகளுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், உளமை மற்றும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், பட்டோலைகள், காலப்பகுப்பாய்வுகள் என்பன காணப்படாமையால் அவ் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது.

1.3.4 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீரிக்கப்பட்ட செலவுகளை செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் பற்றிய காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2005 மார்ச் 31 திகதிய 08/2005 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபம் | ஆதனக் கடன்களுக்கான வங்கி வட்டி வீதம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் 4% இற்கான வட்டி விகிதத்திற்கிடையே வித்தியாசம் அரசினால் பொறுப்பேற்க வேண்டும். எனினும் கடந்த 2 வருடங்கள் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 233,908 தொகையொன்று சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த போதும் அதனை அறவீடு செய்து இருக்கவில்லை. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,845,706 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,429,531 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் உட்பட நிலுவை வருமானம் பற்றிய 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தகவல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 | 2009 | % | % |
| | ரூபா. 000’ | ரூபா. 000’ | | |
| வீதவரி | 1,223 | 1,049 | 16.5 | - |
| ஏக்கர் வரி | 25 | 20 | 25.0 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 471 | 341 | 38.1 | - |
| வாடகை | 962 | 887 | 8.5 | - |
| களியாட்ட வரி | 40 | 49 | - | 18.3 |
| ஏனையவை | 39,455 | 27,318 | 44.42 | - |

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் சபையின் பின்வரும் வருமானங்கள் அறவீடு செய்யும் முன்னேற்றம் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

| வருமானம் | 2010.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2010 ஆண்டிற்கான பில் பண்ணிய தொகை | அறவிடப்பட வேண்டிய தொகை | அறவீடு செய்திருந்த தொகை |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 1,048,746 | 1,480,955 | 2,529,701 | 1,306,311 |
| வாடகை | 218,690 | 901,687 | 1,120,377 | 781,588 |
| வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் | 340,714 | 981,502 | 1,322,216 | 851,691 |

#### 2.2.1 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றங்களினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்து பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 185,125 இற்கான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.2 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயத்திடம் ரூபா 27,620,042 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 நிலுவை வருமானம் அறவீடு செய்தல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 1,509,980 இற்கான அறவிடப்பட வேண்டிய வருமானம் 1987 இன் 15 இலக்கம் கொண்ட பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.4 பஸ் நிலைய கடைகளின் வாடகை

தரை மாடியில் காணப்பட்ட 5 கடைகளில் இருந்து ரூபா 500 வீதம் மேல் மாடியில் காணப்பட்ட 13 கடைகளில் இருந்து மாதாந்தம் ரூபா 800 வீதமும் வாடகைக் கொடுப்பதற்கு 2010 மே 01 திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது.

(i) உடன்படிக்கையின் முதலாவது நிபந்தனையின் பிரகாரம் குறிப்பிட்ட வாடகைப் பணம் ஒவ்வொரு மாதமும் 25 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். எனினும் 08 கடைகளில் இருந்து 2011 ஜூன் 13 திகதியில் உள்ளவாறு ரூபா 75,620 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

(ii) உடன்படிக்கையின் மூன்றாவது நிபந்தனையின் பிரகாரம் ஒரு மாதத்தை விட கூடிய காலம் கொடுப்பனவு செலுத்த தவறுவோருக்கு அவ் வாடகை செல்லுபடியாகாமையால் ஆகும். அத்துடன் பிணைத் தொகையும் வாடகைக்கு கொடுத்தோருக்கு உரித்தாக்க வேண்டும். எனினும் மேற் கூறிய கடைகளுக்காக அவ்வாறு செய்திருக்கவில்லை.

(iii) உடன்படிக்கையின் பிரிவுகள் 8 மற்றும் 9 இன் பிரகாரம் வர்த்தக நிலையத்தை மூடிவைக்கக் கூடாது எனவும் எக் காரணத்தினால் காரணம் ஏதுமின்றி அவ்வாறு மூடிவைக்குமிடத்து உடன்படிக்கை இரத்தாகின்றது. அந்த இடத்தின் உரிமை சபைக்கு சொந்தமாகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 2011 மே 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது தரை மாடியின் மூன்று கடைகளும், மேல் மாடியிலுள்ள அனைத்து கடைகளும் மூடி வைக்கப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது.

(iv) உடன்படிக்கையின் பிரிவு 4 இன் பிரகாரம் கடைகள் அமைந்துள்ள இடத்திற்கு வெளியே காணப்படக் கூடிய விதமாக எவ் விதத்திலும் மறைப்பொன்று, தட்டி ஒன்று, குடில் ஒன்று அல்லது வேறேனும் அங்கீகாரமில்லாத நிர்மாணித்தல் மேற்கொள்ளக் கூடாது என காட்டப்பட்டிருந்த போதும் 02 இலக்க கடையின் வெளியே அமையக் கூடிய விதமாக நிர்மாண வேலையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2.2.5 பொது சந்தை கடைகளை வாடகைக்குக் கொடுத்தல்

---

பொதுச் சந்தையில் 11 கடைகளுக்காக ரூபா 1,000 வீதமும், 11 கடைகளுக்காக ரூபா 750 வீதமும் மாதாந்த வாடகை அறவீடு செய்வதற்காக 2010 ஆண்டின் போது உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது.

(i) உடன்படிக்கையின் இலக்கம் 02 மற்றும் 03 பிரிவுகளின் பிரகாரம் கடைகளுக்காக மாதாந்த வாடகை ஒரு மாதத்திற்கு விஞ்சிய காலப் பகுதி செலுத்தாமல் இருந்தால் வாடகை இரத்தாகும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 07 கடைகளில் இருந்து 2011 ஜூன் 13 திகதியில் உள்ளவாறு ரூபா 321,370 தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கடைகளை வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளர்களினால் உடன்படிக்கைக்கு முரணான இரண்டு கடைகள் துணை வாடகைக்கு வழங்கியிருந்தன என 2011 மே 20 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் துணை வாடகையாளர் ரூபா 4,000 , ரூபா 4,500 தொகை அளவிலான உயர் மாதாந்த வாடகையொன்று ஆரம்ப வாடகையாளருக்கு செலுத்தியிருந்தனர் என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது.

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் கடைகள் மூடிவைத்தல் கூடாது எனினும் 5,7,8,10 இலக்கங்கள் கொண்ட கடைகள் மூடப்பட்டிருந்தன என பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(iv) பொதுச் சந்தையில் 26 கடை சதுர நிலத் துண்டுகள் ரூபா 250 வீதம் மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் இலக்கம் 10 முதல் 21 வரையான அனைத்து சதுரங்களும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டிருந்தன என சந்தையை நிர்மாணிப்பதற்கான சபை செலவீடு செய்திருந்த பொது மக்களின் நலனுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.2.6 விளம்பர் அறிவித்தல்/ தென்படக் கூடிய சுற்றாடல், கட்டணங்கள்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் (பதாகைகள் உட்பட) நிர்மாணித்தலின் மூலம் காட்சிப்படுத்துவதற்காக 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதி இலக்கம் 520/7 உள்ளுராட்சி வர்த்தமானியின் துணை விதிகளின் பிரகாரம் 2010 ஜனவரி 28 திகதிய இலக்கம் 1639 கொண்ட வர்த்தமானியின் மூலம் கட்டணங்கள் விதிக்கப்பட்டு அறவீடு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்கள் தொடர்பாக சபையின் வருமான பரிசோதகருடன் 2011 மே 19 திகதிய மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பெருந் தெருக்களில் பொருத்தப்பட்டிருந்த 44 விளம்பர அறிவித்தல்களில் இருந்து ரூபா 118,050 தொகையான கட்டணங்கள் 2011 மே 19 திகதி வரை அறவிடப்படாமல் காணப்பட்டது. அந்த அறிவித்தல்கள் 2010 ஆண்டு முதல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தவை எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வர்த்தமானியின் பிரகாரம் கட்டிடத்தின் நிலையத்தினை/ கூரையில் காட்சிப்படுத்தப்படும் விளம்பர வர்த்தக அறிவித்தல்களில் இருந்து மற்றும் சுவரொன்றில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல்களில் இருந்து சபையினால் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் (மாத்தறை-தங்காலை) மிக வரையறுக்கப்பட்ட பகுதியொன்றின் மீது பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக ஒட்டு மொத்த அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படும் விளமபர அறிவித்தல்களில் இருந்து சரியான முறையில் கட்டணம் அறவிடப்படாமையால் சபைக்கு நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

2.2.7 வரிகள் மற்றும் கட்டணங்கள்

---------------------------------------------

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பின்வரும் வாடகைகள் மற்றும் கட்டணங்கள் அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளை சுட்டிக் காட்டி 2010 ஜனவரி 28 திகதிய இலக்கம் 1639 கொண்ட வர்த்தமானியின் மூலம் தீர்மானிககப்பட்டிருந்த போதும் குறிப்பிடட வரிகள் மற்றும் கட்டணங்கள் அறவிடப்பட்டமையால் உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(அ) பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 154(1) இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் காணிகள் ஏல விற்பனையானர் ஒருவரால் அல்லது அவரது பிரதி நிதி அல்லது ஊழியர் ஒருவரால் பகிரங்க ஏல விற்பனை மூலம் அல்லது வேறு ஏதும் முறை ஒன்றினால் விற்பனை செய்யும் போது விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தின் 1% இற்கான வரி ஒன்றினை அறவிடப்பட வேண்டும்.

2011 மே 19 கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பத்திலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விஜித மகா வித்தியாலயத்திற்கு அண்மையிலுள்ள விக்டர்கார்ட்ன் காணி, தெல்கல்ல சந்தியிலுள்ள கிரவுன் சிடி காணி என்பன ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த போதும் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 60 இன் பிரகாரம் பீ.எஸ்.26 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்படாமையால் வரி அறவிட்டு விபரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 152 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வங்கி காப்புறுதி பிரதிநிதிகள், சுற்றுலா ஹோட்டல்காரர்கள்/ ரெஸ்டூரன்ட் உரிமையாளர்கள், விழா மண்டப உரிமையாளர், ஓட்டப் பந்தய நிலையங்கள், தனியார் வகுப்புக்கள் நடாத்துவர்கள் வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் பியர் விற்பனை நிலையத்தை நடத்துவர்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்களிடம் வரி செலுத்த வேண்டிய ஆண்டிற்கு முன்னைய ஆண்டின் வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் பெறுவனவுகளின் அடிப்படையில் 1% வரியின் அறவீடு செய்து இருக்கவில்லை.

2.2.8 தொலைபேசி/ தொலைதொடர்பு கோபுரங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கள்

---------------------------------------------

நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேச சபை பணிப்பாளரின் 2008 திசெம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 5/02/01/384 கொண்ட கடிதத்தின் பந்தி 07 இன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தின் தற்போது பயன்படுத்தப்படும் 07 தொலைபேசி/ தொலைதொடர்பு கோபுரங்களில் இருந்து இணக்ககச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக ரூபா 36,000 தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 18,128 | 17,219 | 909 | 16,863 | 4,906 | 11,957 |
| ஏனையவை | 10,650 | 15,833 | (5,183) | 9,830 | 2,553 | 7,277 |
| உப கூட்டுத் தொகை | 28,778 | 33,052 | (4,274) | 26,693 | 7,459 | 19,234 |
| மூலதன செலவுகள் | 118,485 | 121,607 | (3,122) | 89,920 | 44,633 | 45,287 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 147,263 | 154,659 | (7,396) | 116,613 | 52,092 | 64,521 |

2.4 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்று | 03 | 04 |
| இரண்டாரம் | 18 | 19 |
| ஆரம்ப | 31 | 20 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | 04 | 33 |
| | 56 | 76 |

(அ) மீளாய்வாண்டின் போது பதவியணி சம்பளம் மற்றும் அங்கத்தவர்கள் படி என சபைக்க உள்ளூராட்சி ஆணையாளர்களினால் ரூபா 15,047,000 தொகையொன்று மீளளிப்பு செய்திருந்ததுடன் ஆண்டிற்கான சம்பள செலவு ரூபா 16,907,457 ஆக காணப்பட்டமையால் சபைக்கு ரூபா 1,860,457 மேலதிக செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி பதவியணியில் சனசமூக அபிவிருத்தி அலுவலர் ஒருவர் மற்றும் அபிவிருத்தி உதவியாளர் மூவரும் மிகையாக காணப்பட்டனர். மேலும் திறைசேரி செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய இலக்கம் 14 மற்றும் 2006 ஏப்ரல் 10 திகதி இலக்கம் 28 முகாமைத்துவ சேவை சுற்று நிருபங்களின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அமைய, தற்காலிக, ஊழியர் சேர்த்தல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 29 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளமாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,841,319 தொகையொன்று மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்று நிருப அறிவுரைகளுக்கு முரணாக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் நிறுவன தலைவர் அதற்காக தனிப்பட்ட முறையில் பொறுப்பு வாய்ந்தவர் என சுட்டி காட்டப்பட்டுள்ளது.

2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 42,176,369 ஆகும்.

2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,294,911 ஆகும்.

2.5.3 உருப்படி சரிபார்த்தல்

2008 மற்றும் 2009 ஆண்டுகளில் உருப்படி சரிபார்த்தல் சபையின் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் விதப்புரைகள் 2010 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2011 மே 19 திகதி வரை அவ் விதப்புரைகளை அமுல் நடத்தியிருக்கவில்லை.

(i) திக்வெல்ல, கோட்டேகொட, நில்வெல்ல, ரதம்பல முன்பள்ளிகளிலும் திக்வெல்ல குமாரதுங்க, ரத்மல நூலகங்களிலும், பொதுச் சேவை அபிவிருத்தி செயற்திட்டம், ரத்மலே உப அலுவகம் ஆகியவற்றில் முறைப்படி இருப்புப் பதிவேடு பேணப்படல்.

(ii) பிரதேச சபை மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களின் பண்டங்களை குறிப்பாக இனங்காணக் கூடிய விதமாக குறியீடுகள் போடப்பட்டிருக்கவில்லை.

(iii) தலைமை அலுவலக களஞ்சியத்திற்கான குறிப்பிட்ட இடமொன்று ஒதுக்குதல் மற்றும் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் 6 வகைகளைச் சேர்ந்த 30 பண்டங்கள் குறைவு தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்தல்.

2.6 செயற்பாட்டு திறமையின்மை

2.6.1 வீதி விளக்குகள் பராமரிப்பு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக மின் துணைக் கருவிகள் கொள்வனவின் போது தேவைக்கேற்ப மின் தொழிலாளரின் விண்ணப்பம் அதற்காக தொழில்நுட்பவியலாளரின் அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை.

(ii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படும் வீதி விளக்குகளை வெவ்வேறாக இனங்காணக் கூடிய விதமாக இலக்கம் அல்லது குறியீட்டு முறையொன்று பயன்படுத்தப்பட்டு ஒவ்வொரு வீதி விளக்குகளுக்குமான மின்குமிழ்கள் மற்றும் ஏனைய துணைக் கருவிகள் பொருத்தும் போது பொருத்தப்பட்ட திகதி, வியாபாரப் பெயர்

குறியீடு, வோல்ட்களின் அளவு இனங்காணக் கூடிய குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) 2010 ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கை 186 எனினும் சபையினால் 2011 ஜூன் 13 வரை பொருத்தியிருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கை 308 ஆகும். மின்சார சபையில் இருந்து மாதாந்தம் ரூபா 11,262 வீதம் மீளாய்வாண்டிற்கான ரூபா 135,144 தொகைக்காக விண்ணப்பித்திருந்த போது மின்சார சபையில் இருந்து ரூபா 81,980 மாத்திரமே மீளளிப்புச் செய்திருந்தது. எனினும் சபையினால் மீளாய்வாண்டின் போது மேற் கூறிய வீதி விளக்கு பராமரிப்பு தொடர்பாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 215,122 செலவிடப்பட்டிருந்த போதும் ரூபா 133,142 இற்கான மேலதிக செலவு பொறுப்பொன்று ஏற்க நேரிட்டுள்ளது.

## 2.7 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

### 2.7.1 போதரவேல்ல பாதை கொங்கிரீட் பண்ணுதல்

------------------------------------------------------------------------

இந்த நிர்மாண வேலைக்காக பதீகம மேற்கு சமூர்த்தி சங்கத்துடன் 2010 ஏப்ரல் 20 திகதி ரூபா 387,040 பெறுமதியான உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டு ரூபா 379,164 கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) மதிப்பீட்டில் அல்லது உடன்படிக்கையில் காணப்படும் தகவல்களிலிருந்து நிர்மாணிப்பதற்கு தீர்மானித்துள்ள பாதை பகுதி ஆரம்பிக்கும் இடம் மற்றும் முடிவுறும் இடம் என்பவற்றை குறிப்பாகக் காட்டும் வரைபு ஒன்று காணப்படவில்லை.

(ஆ) மதிப்பீட்டின் விடய இலக்கம் 7 பாதையின் இருமருங்கிலும் மண் போடப்பட்டு நிறைக்கும் விடயம் கணக்காய்வுத் திகதியாகிய 2011 மே 18 திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ் விடயத்திற்காக ரூபா 6,685 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது.

(இ) 2010 ஏப்ரல் 29 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய இவ் வேலையின் விடய இலக்கம் 7 மேற்கொள்ளப்பட்டிருக்காத போதும் 2011 மே 13 திகதி பூர்த்தி செய்யப்பட்டதென கணித்து ஒப்பந்த சங்கத்திற்கு 10% தடுத்து வைத்தல் பணமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 2.8 அகக் கணக்காய்வு

---------------------------------

சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு